**வாக்குமூலம்**
**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்,**
**மேட்டூர்,**
**தேதி: 30.01.2026**
**EA.No.19/2025 in EP.No.16/2015**
**வழக்கு சாட்சி RW.1– தாண்டவர், த/பெ. பழனியப்பன்**

( சாட்சி சத்தியப்பிரமாணம் செய்து மனுதரார்கள் தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார் )

**மனுதாரர்கள் தரப்பில் குறுக்கு விசாரணை :**

1) மனுதாரர்கள் மூவரும் எனது சகோதரிகள் என்றால் சரிதான். என் தந்தை பெயர் பழனியப்பன், தாயார் பெயர் இருசம்மாள் என்றால் சரிதான். மனு சொத்தானது எங்கள் பூர்வீக சொத்து என்றால் சரிதான். மனு சொத்து என் தந்தைக்கு பாகம்பிரிவினை மூலம் ஒதுக்கப்பட்டது என்றால் சரிதான். மனு சொத்தை தற்போது வரை பாகம் பிரிக்காமல் கூட்டாகதான் அனுபவித்து வருகிறோம் என்றால் சரியல்ல, என் தந்தை உயிருடன் இருந்தபோதே ஆண் வாரிசுகளுக்கு பிரித்து கொடுத்துவிட்டார். நான் சொல்வது தவறு என்றும், தற்போது வரை பாகம் பிரிக்கப்படாமல் தான் உள்ளது என்றால் சரியல்ல. மனு சொத்தின் பட்டா மற்றும் வருவாய் ஆவணங்கள் கூட்டாக தான் உள்ளது என்றால் சரியல்ல, ஆண் வாரிசுகள் பெயரில் மட்டும் தான் உள்ளது.

2) 2015 ல் மனுதாரர்கள் மனு சொத்தை பொறுத்து பாகம் பிரித்து தருமாறு கேட்டார்கள் என்றும், அதற்கு நான் மறுத்துவிட்டேன் என்றால் அவ்வாறு நான் எதுவும் கேட்கவில்லை. அதனால் மேட்டூர் சார்பு நீதிமன்றத்தில் அ.வ.எண்.235/2015 என்ற பாகபிரிவினை வழக்கு தாக்கல் செய்தார்கள் என்றால் அது குறித்து எனக்கு தெரியவில்லை. நீதிமன்றத்திலிருந்து எனக்கு அழைப்பாணை சார்வு செய்தபோதும் நான் ஆஜராகாததால் அந்த வழக்கு 17.12.2025 ம் தேதியில் மனுதாரர்களுக்கு ஆதரவாக தீர்ப்பாகியுள்ளது என்றால் எனக்கு தெரியவில்லை. 25.05.2025 ல் மனுதாரர்கள் ஊர் பெரியவர்கள் முன்பு சமரசம் பேசினார்கள் என்றும், மேற்கண்ட வழக்கை காரணம் காட்டி மறுத்துவிட்டேன் என்றால் சரியல்ல.

3) 1 முதல் 8 எதிர்மனுதாரர்களுடன் நான் கூட்டு சேர்ந்து பொய்யாக வழக்காடி வருகிறோம் என்றால் சரியல்ல. நாங்கள் மேல்முறையீடு தாக்கல் செய்துள்ளதாக சொல்லப்படும் விவரமானது மனுதாரர்களுக்கு தெரியாது என்றால் சரியல்ல, அவர்களுக்கு தெரியும். நான் மற்ற எதிர்மனுதாரர்களுடன் சேர்ந்து மனுதாரர்களின் கூட்டு சுவாதீன மற்றும் அவர்களது பங்கை மறுத்து வருகிறேன் என்றும், அதனால் நிறைவேற்று மனு தள்ளுபடி செய்யவேண்டும் என்றால் சரிதான்

__3 முதல் 8 எதிர்மனுதார்கள் தரப்பில் குறுக்கு விசாரணை :–__

1) நான் B.Sc வரை படித்துள்ளேன். எனக்கு ஆங்கிலம், தமிழ் இரண்டுமே எழுத, படிக்க தெரியுமா என்றால் தெரியும். என் நிரூபண வாக்குமூலத்திலுள்ள சங்கதிகளை படித்து பார்த்து தான் அதில் கையொப்பம் செய்தேனா என்றால் ஆமாம். அ.வ.எண்.75/2001 ல் நானும் ஒரு தரப்பினர் என்றால் சரிதான். நான் 3 முதல் 8 எதிர்மனுதாரர்கள் மீது அ.வ.எண்.135/2001 என்ற வழக்கு தாக்கல் செய்தேன் என்றால் சரிதான். அந்த வழக்கானது எதிர்மனுதாரர்கள் எங்கள் சொத்தில் பைப் லைன் அமைக்க முயற்சி செய்ததால் பைப் லைன் அமைக்க கூடாது என்று கோரி தாக்கல் செய்தோம். மேற்படி இரு வழக்குகளும் முழுமையாக விசாரிக்கப்பட்டு, அ.வ.எண்.75/2001 தீர்ப்பானது என்றும், அ.வ.எண்.135/2001 தள்ளுபடி செய்யப்பட்டது என்றால் சரிதான். அ.வ.எண்.75/2001 ஐ எதிர்த்து மட்டும் நாங்கள் மேல்முறையீடு செய்தோம் என்றால் சரிதான். அந்த மேல்முறையீடு வழக்கறிஞர் ஆஜராகாததால் தள்ளுபடி செய்யப்பட்டது. நான் சொல்வது தவறு என்றும், மேற்படி மேல்முறையீடானது முழு விசாரணைக்கு பிறகு தள்ளுபடி செய்யப்பட்டு, அ.வ.எண்.75/2001 ல் வழங்கிய தீர்ப்பை உறுதி செய்ததது என்றால் சரிதான், அதை எதிர்த்து இரண்டாம் மேல்முறையீடு தாக்கல் செய்துள்ளோம்.

2) மேற்படி இரண்டாம் மேல்முறையீடும் 02.07.2001 ல் தள்ளுபடி செய்யப்பட்டது என்றால் சரிதான், தேதி தெரியவில்லை. அ.வ.எண்.75/2001 ன் தீர்ப்பை எதிர்த்து எவ்வித நடவடிக்கைகளும் இன்றைய தேதியில் இல்லை என்றால் சரியல்ல, மாண்புமிகு மெட்ராஸ் உயர் நீதிமன்றத்தில் சீராய்வு மனு நிலுவையில் உள்ளது. சீராய்வு மனு நிலுவையிலுள்ளதாக இந்த நிறைவேற்றுதல் மனுவில் எந்த இடத்திலும்

சொல்லவில்லை என்றால் சரியல்ல, சொல்லியுள்ளேன். அந்த சீராய்வு மனுவின் எண் எதுவும் தற்போது வரை இந்த மனுவில் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றும், அவ்வாறு நிலுவையில் இருந்திருந்தால் அந்த சீராய்வு மனுவின் எண்ணையாவது குறிப்பிட்டு சொல்லியிருப்போம் என்றால் சரியல்ல. இரண்டாம் மேல்முறையீடானது இரண்டாம் முறையாக முழு விசாரணைக்கு பின் தள்ளுபடி செய்யப்பட்ட விவரம் எனக்கு தெரிந்தும், அந்த தீர்ப்பின் அடிப்படையில் 3 முதல் 8 பிரதிவாதிகள் எவ்வித பலனும் அடைந்துவிடக்கூடாது என்பதற்காக பொய்யாக வழக்காடி வருகிறேன் என்றால் சரியல்ல.

3) இந்த மனுதாரர்கள் என் உடன்பிறந்த சகோதரிகள் என்றால் சரிதான். அ.வ.எண்.75/2001 வழக்கில் நீதிமன்ற ஆணையாளர் நியமிக்கப்பட்டு, அவர் தாவா சொத்தை பார்வையிட வந்தபோது நான் இருந்தேனா என்றால் இல்லை. நானும் உடன் இருந்தேன் என்றும், மனுதாரர்களாகிய என் சகோதரிகளும் இருந்தார்கள் என்றும், வழக்கிற்காக பொய்யாக இல்லை என்று சொல்கிறேன் என்றால் சரியல்ல. 1ம் எதிர்மனுதாரர் பழனியப்பன் த/பெ.மாரிமுத்து என்பவர் எப்போது இறந்தார் என்றால் எனக்கு தெரியவில்லை. பெரியண்ணன், முத்து, மாதையன் ஆகியோர்கள் என் சகோதரர்கள் என்றால் சரிதான். சித்தூரில் என் சகோதரி பார்வதி குடியுள்ளார். என் சகோதரிகளான பார்வதி, பழனியம்மாள் ஆகியோர்கள் மனு சொத்திற்கு அருகில் தான் குடியுள்ளார்கள். மனு சொத்தில் மனுதாரர்களாகிய என் சகோதரிகளுக்கு எந்த பாக உரிமையும் இல்லை என்றால் சரிதான்.

4) அ.வ.எண்.135/2001லேயே என் மனு சொத்தை என் தந்தை ஆண் வாரிசுகளாகிய எங்களுக்கு பாகம் பிரித்து கொடுத்துவிட்டதாக சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். என் தந்தை பழனியப்பன் 1991லேயே இறந்துவிட்டார் என்றால் சரிதான், அவர் உயிருடன் இருந்தபோதே பாகம் பிரித்து கொடுத்துவிட்டார். மனு சொத்தில் பாகம் கொடுக்குமாறு மேற்கண்ட வழக்குகள் தாக்கல் செய்தபோதோ, என் தந்தை உயிருடன் இருந்தபோதோ, அவர் இறந்த பின்னிட்டு எங்களிடமோ மனுதாரர்கள் கேட்டார்களா என்றால் கேட்கவில்லை. மனுதாரர்களுக்கு எப்போது திருமணம் ஆனது என்றால் என் தந்தை உயிருடன் இருந்தபோதே திருமணம் ஆகிவிட்டது.

5) மனுதாரர்களுடைய பிள்ளைகளுக்கு அண்ணன்மார்களாகிய எங்கள் குடும்பத்திற்குள்ளேயே பெண் எடுத்து, பெண் கொடுத்துள்ளோம் என்றால் சரிதான். 2018 ல் மனுதாரர்கள் இதே மனுவை இந்த நிறைவேற்றுதல் வழக்கில் தாக்கல் செய்தார்கள் என்றால் எனக்கு தெரியாது. அந்த மனுவின் நகலானது எங்கள் தரப்பில் அறிவிப்பு கொடுக்கப்பட்டு, திரு.A.M.C.பெரியசாமி எனும் வழக்கறிஞருக்கு நகல் கொடுக்கப்பட்டு தான் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும், தற்போது தெரியவில்லை என்று நான் பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. 2ம் மேல்முறையீடு முடிவுற்றபிறகு மனுதாரர்களிடம் நாங்கள் சொல்லி மீண்டும் அதே மனுவை தற்போதும் தாக்கல் செய்ய வைத்துள்ளோம் என்றால் சரியல்ல.

6) 2018 ல் தாக்கல் செய்த மனுவானது சில குறிப்புகள் தெரிவித்து திருப்பப்பட்டது என்றும், அதை மீண்டும் வருடத்தை திருத்தி 2ம் மேல்முறையீடு முடிந்தபின்னிட்டு, இந்த மனுவில் விசாரணை இறுதிகட்ட நிலைக்கு வரும்போது நிறைவேற்றுதல் மனுவின் விசாரணையை காலதாமதப்படுத்த REA.No.19/2025 என்ற மனுவை மனுதாரர்களை தாக்கல் செய்ய வைத்துள்ளோம் என்றால் சரியல்ல. மேட்டூர் சார்பு நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட அ.வ.எண்.235/2015 ல் எனக்கு அறிவிப்பு ஏதேனும் வழங்கப்பட்டதா என்றால் இல்லை. என் நிரூபண வாக்குமூலத்தை தாக்கல் செய்வதற்கு முன்னதாக மேற்கண்ட வழக்கு யார் யார் மீது என்ன பரிகாரம் கோரி யாரால் தாக்கல் செய்யப்பட்டது என்று தெரிந்து கொண்டேனா என்றால் அது எனக்கு அவசியமில்லை, அதனால் பார்க்கவில்லை. என் நிரூபண வாக்குமூலத்தில் மேற்படி மனுதாரர்கள் எதிர்மனுதாரர்கள் வசம் பாகம் பிரித்து தர கோரினார்கள் என்பதும், அதற்காக மேட்டூர் சார்பு நீதிமன்றத்தில் வழக்கிட்டுள்ளனர் என்றும், அது அ.வ.எண்.235/2015 என நிலுவையில் உள்ளது பற்றி நாங்கள் அறியாததாகும் என்று 24.11.2025 அன்று தெரிவித்துள்ளேன் என்றால் சரிதான்.

7) அதற்கு பிறகாவது மேற்கண்ட வழக்கை பற்றியும், அதில் ஆஜராவதற்கும் ஏதேனும் நடவடிக்கை எடுத்தேனா என்றால் இல்லை. அந்த வழக்கு தீர்ப்பாகிவிட்டதாக மனுதாரர்கள் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது என்றால் எனக்கு தெரியவில்லை.

மனுதாரர்கள் கோரியவாறு பாகம் வழங்கப்பட்டுவிட்டதால் இந்த மனுவானது நிலைக்கதக்கதல்ல என்றால் எனக்கு தெரியவில்லை. 3 முதல் 8 எதிர்மனுதாரர்களை தரப்பினர்களாக சேர்க்காமல் எங்களுக்குள்ளேயே தாக்கல் செய்து, ஒரு தலை பட்ச தீர்ப்புக்கு விட்டுவிட்டு நடித்து வருகிறோம் என்றால் சரியல்ல. அ..வ.எண்.75/2001ல் என்ன தீர்ப்பானது என்று தெரிந்து கொண்டேனா என்றால் பைப் லைன் போட்டுக்கொடுக்குமாறு சொல்லப்பட்டதாக வழக்கறிஞர் மூலம் தெரிந்து கொண்டேன். ச.எண்.62/1F2 மற்றும் ச.எண்.62/1G ல் பைப் லைன் அமைத்துக்கொள்ள 3 முதல் 8 எதிர்மனுதாரர்களுக்கு உரிமையுள்ளது என்றும், எங்களால் உடைக்கப்பட்ட பைப் லைனை மீண்டும் நாங்களே சரி செய்து கொடுக்கவேண்டும் என்றும் தீர்ப்பாகியுள்ளது என்றால் சரியல்ல. அது அனைத்தும் தெரிந்துதான் நான் இரண்டு மேல்முறையீடுகள் தாக்கல் செய்துவிட்டு தற்போது சரியல்ல என்று சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

8) இந்த வழக்கில் வழங்கப்பட்டுள்ள செயலுறுத்துக்கட்டளை பரிகாரமானது மனுதாரர்கள் தாக்கல் செய்த பாகபிரிவினை வழக்கில் பாகம் வழங்கப்பட்டுள்ளதால் எவ்விதத்திலும் பாதிப்படையாது என்றால் சரியல்ல. மனுதாரர்கள் தாக்கல் செய்த மனுவை தள்ளுபடி செய்யவேண்டும் என்றுதான் நான் கேட்டுள்ளேன் என்றால் சரிதான்.

எதிர்மனுதாரர்கள் 20 முதல் 22 வரை தரப்பில் யாரும் ஆஜரில் இல்லாததால் குறுக்கு விசாரணை முடித்துவைக்கப்படுகிறது.

ஒம்/–திரு. M.செல்வம்,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மேட்டூர்.